# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2331/55 - 2023 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2023.05.12

*2331/55 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பதுளை மாகாண பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக மேம்படுத்தல்**

இலங்கையின் மருத்துவ கல்வியை விரிவுபடுத்தும் வகையில், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடம் நிறுவுவதற்கு 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஸ்தாபிப்பதை அறிவிப்பதற்காக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 27(1) ஆவது பிரிவின் கீழ் உள்ள ஏற்பாட்டை திருத்தி கல்வி அமைச்சினால் 2023.03.20 ஆந் திகதிய 2324/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட புதிய பீடத்தின் மாணவர்களுக்கு உள்ளக பயிற்சிகள் வழங்குவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பதுளை மாவட்ட பொது வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பட்டப்பயிற்சி மற்றும் உயர் கற்கை பட்டப் பயிற்சிக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு பதுளை பொது வைத்தியசாலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டு மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.


1A - G 39471 — 56 (2023/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த வைத்தியசாலை தொடர்பான பிற தகவல்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 01 | நிறுவனத்தின் பெயர் | போதனா வைத்தியசாலை, பதுளை |
| 02 | விடய நோக்கம் | மத்திய அரசு |
| 03 | நிர்வாக மாவட்டம் | பதுளை |
| 04 | தேர்தல் பிரிவு | பதுளை |
| 05 | பிரதேச செயலாளர் பிரிவு | பதுளை |
| 06 | கிட்டிய நிர்வாக அலுவலகம் | போதனா வைத்தியசாலை, பதுளை |
| 07 | நிறுவனத்தின் பொறுப்பதிகாரி | பணிப்பாளர் |
| 08 | அறிக்கையிடும் அதிகாரி | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் |
| 09 | தபால் மற்றும் தந்தி அலுவலகம் | பதுளை |
| 10 | அருகில் உள்ள புகையிரத நிலையம் | பதுளை |
| 11 | பொலிஸ் நிலையம் | பதுளை |

**எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,**
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

இலக்கம் 385, "சுவசிரிபாய"
சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2023, மே 11.

EOG 05-0084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.